பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 06 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - மொரீஷியஸ் இடையேயான நட்புறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் பாதுகாப்புத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் நிலவும் பிரச்சினைகளில் இருந்து மக்களை திசைதிருப்பும் நடவடிக்கைகளில் மாநில அரசு கவனம் செலுத்தி வருவதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. தமிழகத்தில், கோவை, நீலகிரி, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. லண்டனில் நடைபெற்று வரும் ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா **3-2** என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - மொரீஷயஸ் இடையேயான நட்புறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், மொரீஷியஸ் பிரதமர் உடனான பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

மொரீஷியசுக்கு இந்தியா வழங்கியுள்ள சிறப்பு பொருளாதார நிதி தொகுப்பு திட்டத்தின்கீழ் அந்நாட்டின் பல்வேறு திட்டங்களை இந்தியா செயல்படுத்தி வருவதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திறன் மேம்பாடு, பாதுகாப்பு, எரிசக்தி, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் ஜவுளி ஏற்றுமதி வரும் 2031ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

திருப்பூரில் ஏற்றுமதியாளர்களுடன் கலந்துரையாடிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

புதிய வகை ஆடைகளை தயாரித்து ஏற்றுமதி செய்வது குறித்து ஆலோசனை நடத்தியதாக அவர் கூறினார்.

ஜவுளி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஜவுளி ஏற்றுமதியாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<>>>>

புலிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு உதவிடும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Alwar-ல்** புலிகள் பாதுகாப்பு தொடர்பான தேசிய பயிலரங்கை தொடங்கி வைத்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகள் பாதுகாப்புத் திட்டம், வனவிலங்கு பாதுகாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், காடுகள், நீர்நிலைகளின் பாதுகாப்பிற்கும், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கும் உதவிடும் என்று திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் பாதுகாப்புத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவின் முதலாவது **C-295** விமானம் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தனது மன் கி பாத் உரையில் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நீண்டதூர ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மொழிகள், பழமையான நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை டிஜிட்டல் முறையில் பாதுகாக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையினலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் இத்தகைய முயற்சிகள் இந்திய மொழிகள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வலுப்படுத்துவதுடன், தொழில்நுட்ப அடிப்படையிலான பாரம்பரியத்துடன் இணைப்பை ஏற்படுத்தும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் அதிக ஈரப்பதம் இருக்கும் நெல்மணிகளை வேளாண்துறை உதவியுடன் உலர வைத்து அவற்றை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு. வெங்கட்ரமணன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் ஆய்வு மேற்கொண்ட பின் அவர் இதனைத் தெரிவித்தார்.

தண்ணீர் பற்றாக்குறை அல்லது மழைப்பொழிவு குறையும் காலங்களில் மாற்றுப் பயிர்களை பயிர் செய்வதற்கான முயற்சிகளை விவசாயிகள் மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று திரு. வெங்கட்ரமணன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை தவிர்த்து திசைதிருப்பும் வேலைகளில் மாநில அரசு கவனம் செலுத்தி வருவதாக திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குறை கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த வானகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழ்நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு திமுக தொண்டர்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திமுக ஆட்சி காலத்தில் மாநிலத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், பாலியல் கொடுமை, போதைப்பொருள் புழக்கம் அதிகரித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பதவியை கருத்தில் கொள்ளாமல், கொள்கையை முக்கியமாக கருதி மாற்றுக் கட்சியினர் திமுகவில் இணைந்து வருவது பாராட்டுதலுக்குரியது என்று திரு. மு.க. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் வளர்ச்சியில் ஆளும் கட்சிக்கு அக்கறையில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற மாவட்ட செயல் வீரர்கள் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் வளர்ச்சிக்காக பிஜேபி தொடர்ந்து பாடுபடும் என்று தெரிவித்தார்.

மேகதாது விவகாரம் தொடர்பாக உரிய நேரத்தில் பிஜேபி சார்பில் போராட்டம் நடத்துவது குறித்து அறிவிக்கப்படும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

கல்லூரி பேராசிரியர்கள் பணி நியமன தேர்வு முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மாநில அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், இது தொடர்பான புகார்கள் மீதான விசாரணை முடியும் வரை பணி நியமனம் குறித்த நடைமுறைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுடையவர்களுக்கு ஆசிரியர் பணிக்கான வாய்ப்புகளை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

அரசு இசைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் சேலத்தில் பிரம்மாண்ட பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்து 450 மாணவியர் பங்கேற்று நடனமாடி சாதனை நிகழ்த்தப்பட்டதாக ஆசிரியர் சங்க தலைவர் திரு. சக்தி எமது செய்தியாளர் தெரிவித்தார்.

**(Voice Byte — Vijayakumar — 36 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில், கோவை, நீலகிரி, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்தப் பாதை காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மாவட்டங்கள், நாமக்கல், ஈரோடு, சேலம், மதுரை மாவட்டங்களில், ஒருசில இடங்களில், அடுத்த ஆறு தினங்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பிரான்சில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

-------------

இஸ்ரேல் - லெபனான் இடையேயான ஒப்பந்தம் குறித்து அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உடன் லெபனான் அதிபர் திரு. **Joseph Aoun** ஆலோசனை நடத்தினார்.

-------------

அமெரிக்காவில் கொலராடோ - **Utah** எல்லை அருகே உள்ள வனப்பகுதியில் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 3 தீயணைப்புப் படையினர் உயிரிழந்தனர்.

-------------

ஜம்மு-கஷ்மீரில் பூன்ச் மாவட்டத்தில் எல்லையொட்டிய பகுதியில், இந்திய எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரை காவல்துறை கைது செய்துள்ளது.

-------------

மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த 4 பாரம்பரிய வேளாண் விளைபொருளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

-------------

சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைய முயன்ற பங்களாதேஷை சேர்ந்த 8 பேரை திரிபுரா காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே, திருச்சி நெடுஞ்சாலைப் பகுதியில், லாரிகளில் இருந்து டீசல் திருடி பதுக்கி வைத்திருந்த 6 பேரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

-------------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே நேரிட்ட சாலை விபத்தில், சம்பவ இடத்திலேயே இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

-------------

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளதை அடுத்து பழங்களை ருசிப்பதற்காக காட்டு யானைகள் கோத்தகிரி மலைப் பகுதியில் முகாமிட்டுள்ளன.

-------------

சென்னையை அடுத்த துரைப்பாக்கம் பகுதியில் சட்டவிரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்திருந்த நபரை சென்னை பெருநகர காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

**லண்டனில் நடைபெற்று வரும் ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பெனால்டி சூட்-அவுட் முறையில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.**

-------------

**இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் கேப்டன் Ben Stokes சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.**

**<<<<The End>>>>**